# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய பொருளாதாரம்

பகுதி : **பொதுத்துறைகளின் பங்கு மற்றும் பங்கு விலக்கல்**

**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பொதுத்துறைகளின் பங்கு மற்றும் பங்கு விலக்கல்

- 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பேரியல் பொருளாதார சீர்திருத்தங்கள், பொதுத்துறை நிறுவனங்களைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு சீரமைத்தது. இது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கியது. 1991 புதிய தொழில் கொள்கை, பங்கு விலக்கல் (Disinvestment), தனியார் மற்றும் அயல்நாட்டு மூலதனத்தை ஊக்குவித்தல் போன்றவையாகும். பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெருக்குதல் மற்றும் வருமானப் பகிர்வு செய்தல் என்ற நிலையிலிருந்து மாறி உச்ச இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது.

### 1991 ஆம் ஆண்டின் புதிய தொழில் கொள்கை

- ஜீலை 1991 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட புதிய தொழில் கொள்கையின் முக்கிய நோக்கம் தொழில் துறையில் போட்டியை ஊக்குவித்தலின் மூலம் தனியார் நிறுவனங்களை அதிக அளவு உற்பத்தியில் ஈடுபடச் செய்தலே ஆகும்.

### பொதுத்துறை நிறுவனங்களை மறுசீரமைத்தலின் சிறப்புச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு

1. பொதுத் துறைக்கென தொழில்துறையில் ஒதுக்கப்பட்ட பகுதிகள் 17ல் இருந்து 8 ஆக குறைக்கப்பட்டது. குறிப்பாக தொலைத் தொடர்பு, மின்சாரம், விமானப் போக்குவரத்து, பெட்ரோலியம் போன்ற துறைகள் தனியாருக்கு திறந்து விடப்பட்டன.
2. பங்கு விலக்கல் மூலம் பொதுத்துறை வளங்களைப் பெருக்குவதுடன், பொதுத் துறை நிறுவனங்களில் தனியார் பங்கேற்பையும் ஊக்குவித்தல்.
3. நலிந்த தொழில் நிறுவனங்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவும், மறுசீரமைக்கவும் தொழில் மற்றும் நிதி மறு கட்டமைப்புக் குழுவிற்கு (Board of Industrial Financial Reconstruction) (BIFR) பரிந்துரை செய்தல்.
4. திறன் பெற்ற பொதுத்துறை நிறுவனங்களை மட்டும் புதுப்பித்து புதிய சட்டதிட்டங்கள் மூலம் அதன் செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

5. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசு முதலீடுகளை திரும்பப் பெறுவதன் காரணம், அரசின் நிதிச்சுமையைக் குறைப்பதே ஆகும்.
6. "ஆண்டு நிதிநிலை அறிக்கை" மூலம் நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் ஆதரவை படிப்படியாக விலக்கிக் கொள்ளுதல்.
7. நன்றாக செயல்படக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர மற்றவைகளை மூடிவிடுவது.
8. 1998-99 ஆம் ஆண்டு மேலும் **இரண்டு** பொதுத்துறை நிறுவனங்கள் அகற்றப் பட்டன. மூன்று துறைகள் மட்டுமே பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டு மற்ற அனைத்தும் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீட்டிற்கு ஒதுக்கப்பட்டது.

**முதலீடு கலைப்புத்துறை (Disinvestment)**

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதே ஆகும்.

## பொது நிறுவனங்களின் பங்கு விலக்கல் (Disinvestment of Public Enterprises)

- 1991-ம் ஆண்டு தொழில் கொள்கைக்குப் பிறகு அரசு பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விலக்கலில் மூன்று மாதிரிகளை கையாண்டது. அவையாவன பொது வெளியீடு (Public Offer), யுக்தி அளவு (Strategic Scale) மற்றும் குறுக்கு உடைமை (Cross holding) ஆகும். 1991 ஆம் ஆண்டு அரசு 51% மேல் "யுக்தி அளவு" விற்பதற்கு முடிவு செய்தது. புதிதாக 74% முதல் 100% நிர்ணயித்துள்ளது.
- பங்கு விலக்கலின் மூலம் திரட்டப்படும் நிதியானது விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்கு (VRS) தொகை வழங்குதல், தொழிலாளர் பணி நீக்கத்திற்கு பயன்படுத்துதல், தொழிற் சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டோர் போன்றவர்களுக்கும் பயன்படுத்தப்படும். 1991-92 ஆம் ஆண்டு 30 பில்லியனுக்கும் மேலும், 1992-93 ஆம் ஆண்டு 35 பில்லியன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 18.6 பில்லியனும், 2002-03 ஆம் ஆண்டு வரை 300 பில்லியன் வரை பங்கு விலக்களின் மூலம் பெறப்பட்டது.